# ஜனவரி – 30 – புதன்

## புனித பர்த்தித்தில் அரசி

**வலிமைமிகு உமது செங்கோலை ஆண்டவர் சீயோனிலிருந்து ஓங்கச்செய்வார் - திபா 110 : 2**

## முதல் வாசகம் : எபிரேயர் 10 : 11 – 18

சகோதரர் சகோதரிகளே! ஒவ்வொரு குருவும் நாள்தோறும் இறை ஊழியம் புரியும்போது மீண்டும் மீண்டும் அதே பலிகளைச் செலுத்தி வருகிறார். அவையோ பாவங்களை ஒருபோதும் போக்க இயலாதவை. ஆனால், இவர் ஒரே பலியைப் பாவங்களுக்காக என்றென்றைக்கும் எனச் செலுத்திவிட்டு, கடவுளின் வலப் பக்கத்தில் அமர்ந்துள்ளார். அங்கே தம் பகைவர் தமக்குக் கால்மணை ஆக்கப்படும்வரை காத்திருக்கிறார். தாம் தூயவராக்கியவர்களை ஒரே பலியினால் என்றென்றைக்கும் நிறைவுள்ளவராக்கினார். இதுபற்றித் தூய ஆவியாரும், ”அந்நாள்களுக்குப்பிறகு அவர்களோடு நான் செய்யவிருக்கும் உடன்படிக்கை இதுவே என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்பேன் அதை அவர்களது இதயத்தில் எழுதி வைப்பேன்” என்று நமக்குச் சான்று பகர்கிறார். இவ்வாறு சொன்ன பின், ”அவர்களது தீச்செயலையும் அவர்களுடைய பாவங்களையும் இனிமேல் நினைவுகூர மாட்டேன்” என்றும் கூறுகிறார். எனவே பாவமன்னிப்பு கிடைத்தபின் பாவத்திற்குக் கழுவாயாகச் செலுத்தும் பலிக்கு இடமேயில்லை.

**பதில்பாடல் :** மெல்கிசதேத்தின் முறைப்படி நீர் என்றெள்றும் குருவே.

## நற்செய்தி : மாற்கு 4 : 1 – 20

அக்காலத்தில் இயேசு மீண்டும் கடலோரத்தில் கற்பிக்கத் தொடங்கினார். மாபெரும் மக்கள் கூட்டம் அவரிடம் ஒன்றுகூடி வர, அவர் கடலில் நின்ற ஒரு படகில் ஏறி அமர்ந்தார். திரண்டிருந்த மக்கள் அனைவரும் கடற்கரையில் இருந்தனர். அவர் உவமைகள் வாயிலாகப் பலவற்றை அவர்களுக்குக் கற்பித்தார். அவர் அவர்களுக்குக் கற்பித்தது ”இதோ, கேளுங்கள், விதைப்பவர் ஒருவர் விதைக்கச் சென்றார். அவர் விதைக்கும் பொழுது சில விதைகள் வழியோரம் விழுந்தன. பறவைகள் வந்து அவற்றை விழுங்கிவிட்டன. வேறு சில விதைகள் மிகுதியாக மண் இல்லாப் பாறைப் பகுதிகளில் விழுந்தன. அங்கே மண் ஆழமாக இல்லாததால் அவை விரைவில் முளைத்தன. ஆனால் கதிரவன் மேலே எழ, அவை காய்ந்து, வேர் இல்லாமையால் கருகிப் போயின. மற்றும் சில விதைகள் முட்செடிகளிடையே விழுந்தன. முட்செடிகள் வளர்ந்து அவற்றை நெருக்கிவிடவே, அவை விளைச்சலைக் கொடுக்கவில்லை. ஆனால் இன்னும் சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவை முளைத்து வளர்ந்து, சில முப்பது மடங்காகவும் சில அறுபது மடங்காகவும் சில நூறு மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன. கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்.” அவர் தனிமையான இடத்தில் இருந்தபோது அவரைச் சூழ்ந்து இருந்தவர்கள், பன்னிருவரோடு சேர்ந்து கொண்டு, உவமைகளைப்பற்றி அவரிடம் கேட்டார்கள். அதற்கு இயேசு அவர்களிடம், ”இறையாட்சியின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது புறம்பே இருக்கிறவர்களுக்கோ எல்லாம் உவமைகளாகவே இருக்கின்றன. எனவே அவர்கள் ”ஒருபோதும் மனம் மாறி மன்னிப்புப் பெறாதபடி கண்ணால் தொடர்ந்து பார்த்தும் கண்டுகொள்ளாமலும் காதால் தொடர்ந்து கேட்டும் கருத்தில் கொள்ளாமலும் இருப்பார்கள்” என்று கூறினார். மேலும் அவர் அவர்களை நோக்கி, ”இந்த உவமை உங்களுக்குப் புரியவில்லையா? பின்பு எப்படி மற்ற உவமைகளையெல்லாம் நீங்கள் புரிந்துகொள்வீர்கள்? விதைப்பவர் இறைவார்த்தையை விதைக்கிறார். வழியோரம் விழுந்த விதைகளுக்கு ஒப்பானவர்கள் வார்த்தையைக் கேட்பார்கள். ஆனால் அதைக் கேட்டவுடன் சாத்தான் வந்து அவர்களுள் விதைக்கப்பட்ட வார்த்தையை எடுத்துவிடுகிறான். பாறைப் பகுதியில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானவர்கள் இறைவார்த்தையைக் கேட்டவுடன் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் அவர்கள் வேரற்றவர்கள் சிறிது காலமே நிலைத்திருப்பவர்கள். இறைவார்த்தையின் பொருட்டு இன்னலோ இடுக்கண்ணோ நேர்ந்த உடனே அவர்கள் தடுமாற்றம் அடைவார்கள். முட்செடிகளுக்கு இடையில் விதைக்கபட்ட விதைகளுக்கு ஒப்பானவர்கள் இறைவார்த்தையைக் கேட்டும் உலகக் கவலையும் செல்வ மாயையும் ஏனைய தீய ஆசைகளும் உட்புகுந்து அவ்வார்த்தையை நெருக்கி விடுவதால் பயன் அளிக்கமாட்டார்கள். நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானவர்கள் இறைவார்த்தையைக் கேட்டு அதை ஏற்றுக் கொண்டு பயன் அளிப்பார்கள். இவர்களுள் சிலர் முப்பது மடங்காகவும் சிலர் அறுபது மடங்காகவும் சிலர் நூறு மடங்காகவும் பயன் அளிப்பர்” என்றார்.

**தியானம் :** இறை வார்த்தையைச் செவிமடுப்போரது தகைமைக்கு ஏற்றவாறே அதனைப் புரிந்து கொள்ளும் விதமும், செயற்படும் தன்மையும் மாறுபடுமென நற்செய்தியில் இறைமகன் இயேசு சுட்டிக்காட்டுகின்றார். பாவக் கறைபடிந்த கடின இதயங்கள் ஆழமாக ஊன்றி வேரிட முடியாத வழியோரங்களாகவும், மண்ணில்லாக் கற்பாறையான கடின நிலங்களாகவும் கருதப்படும். நல்நிலத்தில் (இறை பிரசன்னம் நிறைந்த பரிசுத்தமான இதயங்களில்) விழுந்த விதைகள் (இறை வார்த்தைகள்) பலுகிப்பெருகி பெருவிளைச்சலைக் கொடுக்குமெனவும் நற்செய்தி தெரிவிக்கின்றது. எம்மை நாமே ஒரு கணம் ஆராய்ந்து பார்ப்போம். திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்கள் என்ற அடிப்படையில் அன்னையாம் திரு அவை தூய ஆவியின் துணையுடன் பல வழிகளில் எமது உள்ளத்திலும் இறைமகன் இயேசுவின் நற்செய்தி வார்த்தைகளை விதைக்கின்றாள். எனினும், அந்த வாரத்தையை எமது உள்ளத்தில் இருத்தி பலன் கொடுக்கும் விருட்சங்களாக நாம் மாறியுள்ளோமா? எமது தாய்நாட்டில் இப்போதுள்ள பல்வேறுபட்ட சூழ்நிலைகளின் மத்தியில் நாம் உயிருடன் வாழும் நிலை ஏற்பட்டிருக்குமா? எமது உயிரைக் காப்பாற்றி அன்னிய நாட்டில் நிம்மதியாக வாழ வைத்திருப்பதே இறைவன் எமக்கு கொடுத்த மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். இதற்கு நன்றிப் பரிகாரமாக எஞ்சியிருக்கும் வாழ்நாள் முழுவதும் நாம் அவரது வார்த்தைக்குக் கட்டுப்பட்ட மக்களாக வாழவேண்டாமா? இறை வார்த்தையை எம் உள்ளத்தில் இருத்தி “இறை வார்த்தை அனைத்தையும் செய்து முடிக்கும்” என நம்புவோம். எம்மைப் படைத்துப் பாதுகாத்துப், பராமரித்து வருபவரை அனுதினமும் துதிகளால் அலங்கரிப்போம். அவரது மறுவருகையின் போது நாமும் நற்கனி கொடுக்கும் விருட்சமாக அவரது நிழலில் இளைப்பாறுவோம்.